செய்தி வெளியீடு                                                                 நாள்:23.05.2024

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் பணிபுரியும் பெண் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு "அவள்" திட்டம் மற்றும் பாலியல் துன்புறுத்தலைத் தடுத்தல் (POSH) குறித்த "விழிப்புணர்வு பயிலரங்கம்" சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

•••••••

இன்று (23.05.2024) சென்னை, எழும்பூர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் சென்னைப் பெருநகர காவல், நிர்பயா நிதியுதவியுடன் இயங்கும் பாதுகாப்பு நகரத் திட்டங்களில் ஒன்றான திறன் மேம்பாட்டு திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் பணிபுரியும் பெண் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு "அவள்" திட்டம் மற்றும் பாலியல் துன்புறுத்தலைத் தடுத்தல் (POSH) குறித்த "விழிப்புணர்வு பயிலரங்கத்தை" சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப. அவர்கள் தொடங்கி வைத்து தலைமையுரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர காவல், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்ற தடுப்புப்பிரிவு காவல் துணை ஆணையாளர் முனைவர்.கோ.வனிதா அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு, பெண்களுக்கு எதிரான குற்றங்களிலிருந்து தற்காத்துக் கொள்வது குறித்தும், பணியிடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்ததிலிருந்து எவ்விதம் பாதுகாத்து கொள்வது குறித்தும், காவல் உதவி App மற்றும் பல்வேறு காவல் உதவி எண்கள் ஆகியவை குறித்தும் சிறப்புரையாற்றினார்.

இப்பயிலரங்கத்தில் பாலியல் துன்புறுத்தலைத் தடுத்தல் (POSH) என்ற தலைப்பில் மனோதத்துவ நிபுணரும் மற்றும் வழக்கறிஞருமான முனைவர் ஞா.பத்மபிரியா அவர்கள் பங்கேற்று பெண்கள் நலன் மற்றும் பாதுகாப்புக்காக "அவள்" (AVAL - Avoid Violence through Awareness and Learning) என்ற திட்டத்தின் கீழ் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சட்ட உரிமைகள், சட்ட உதவிகள், பாதுகாப்பு அம்சங்கள், சமுதாயத்தில் பெண்களின் பங்கு, தனித்திறன், சட்ட நுணுக்கங்கள் தொடர்பான தகவல்கள் குறித்து விழிப்புணர்வு முகாம்கள் நடத்தவும், ஊடகங்கள், சமூக வலைதளங்கள் மற்றும் விளம்பரங்கள் வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்தி சமூகத்தில் வன்முறையைக் குறைக்கவும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு தற்காப்பு பயிற்சிகள் வழங்குவது குறித்து விளக்கிக் கூறினார்.

இப்பயிலரங்கில் 100க்கும் மேற்பட்ட சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் பணிபுரியும் பெண் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

Verified RedEstate™